30th March 1965]

தர்மபுரி நகராட்சியில் வார்டுகளைப் பிரித்து அறிவிக்கும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்த பிறகு தேர்தல் நடத்தப்படும்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: தர்மபுரி நகராட்சியாக மாற்றப்பட்டு சுமார் ஒரு வருடமாகிறது. இருந்தாலும் இந்தத் தேர்தல் அண்மையில் நடைபெறும் என்பதற்கு யாதொரு முகாந்திரமும் இல்லாமல் இருக்கிறது. இன்னும் எவ்வளவு காலத்திற்குள் அந்த வேலைகள் எல்லாம் முடியும்? எப்போது தேர்தல் நடத்தப்படும் என்பதை அறிவிப்பார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தர்மபுரி நகராட்சியிலும் அதோடு இன்னும் ஆறு நகராட்சிகளிலும் ஸ்பெஷல் ஆபீசர்கள் இருந்து வார்ட் பிரிவினை சம்பந்தப்பட்ட வேலைகளில் அவர்கள் எடுத்து வரும் நடவடிக்கைகளை மேல் அதிகாரிகளுக்கு தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளை நீக்கி பூரணமாக நல்லமுறையில் அமைந்தால் தான் தேர்தல் நடத்த சற்று வாய்ப்பு ஏற்படும் என்பதை அங்கத்தினர் அறிவார்கள்.

Loans under Cattleshed-cum-Rural Compost Scheme

* 371 *Q.*—SRI K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the amount sanctioned as loan to the Agriculturists under the Cattleshed-*cum*-Rural Compost Scheme during 1964; and

(*b*) the number of cattlesheds constructed ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ரூபாய் 1,90,500.

(இ) 220.

'ஜென்மி' முறை ஒழிப்பு

* 372 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லா கூடலூர் தாலுகாவில் அமுலில் இருக்கும் 'ஜன்மி' முறையை ரத்து செய்யும் உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், எப்போது முதல்?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) The proposal is under the consideration of the Government and no final decision has yet been reached.

திரு. டி. கார்ச்சா கவுடர்: ஜென்மி முறையை ஒழிக்க 1962-ல் அதற்காக நியமிக்கப்பட்ட விசேஷ அதிகாரி அவர்கள்

ரிப்போர்ட்டை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். இனியும் காலதாமதம் செய்து கொண்டுபோக என்ன காரணம் என்று கூறமுடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : காலதாமதப்படுத்தவில்லை. இதிலுள்ள பல்வேறு சிக்கல்களை ரெவின்யூ போர்ட், லா டிப்பார்ட்மென்ட், மற்ற டிப்பார்ட்மென்ட்ஸ் பரிசீலனை செய்யவேண்டும். அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். விரைவில் ஒரு முடிவு ஏற்படும்.

தஞ்சை மாவட்டத்தில் தீவிரச் சாகுபடித் திட்டம்

*373 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தீவிர சாகுபடித் திட்டம் நடைமுறையிலிருக்கும் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்த அமெரிக்க நிபுணர் குழு, அங்கு அத்திட்டம் சரிவர செயல்படவில்லை என்றும், நிலச் சீர்திருத்தச் சட்டங்கள், அங்கு சிறிதும் செயல்படாமையே அதற்குக் காரணம் என்றும் கருத்தறிவித்தது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The Member is presumably referring to the report of Mr. Wolf Ladijinsky of the Ford Foundation on the tenurial conditions and their impact on the Package Programme in the Thanjavur district. The report was received by the Government.

(*b*) The report was examined in detail. The attention of the Member is invited to the Press Note No. 20, dated 1st September 1964, which contains the views of the Government on the report.

Report of Expert Team of Ford Foundation

*374 *Q.*—SRI M. KALYANASUNDARAM : } SRI C. CHIRANJEEVULU NAIDU : } Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government are in receipt of the report of the Expert Team of Ford Foundation headed by Mr. Wolg Ladijinsky on the Package Programme in Thanjavur district; and

(*b*) whether a copy of the same would be placed on the table of the House ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir. But the report was by Mr. Wolf Ladijinsky only and not by any team of experts.

(*b*) The Government consider that it will not be in the public interest to do so.